# சமயம், கலாசாரம், ஒழுக்கம் - சில புரிதல்களும் பல கேள்விகளும்

**மாரிமுத்து பிரகாஷன்**
தத்துவவியல் விரிவுரையாளர்
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*prahasankm@esn.ac.lk*

மிகப்பெரும் அழிவினை மிகக்குறுகிய நேரத்தில் ஏற்படுத்தக்கூடிய அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்குரியதாக விஞ்ஞான அறிவு வளர்ந்துள்ள நிலையில் அவை எங்கு பிரயோகிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொள்வதில் சமய நம்பிக்கைகள் தாக்கம் செலுத்துகின்ற உலகில் நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பன்மைத்துவமான கடவுள்கள், சமயங்கள், அவற்றை மையமாகக் கொண்ட நம்பிக்கைகள் பின்பற்றப்படுகின்ற உலகில் இவற்றுக்கிடையிலான ஒற்றுமையினையும் அதனையறியாத மனிதர்களின் நிலைமையினையும் விளக்குவதற்கு கண் பார்வையற்றவர்கள் ஒரு யானையின் பல்வேறு பாகங்களை தனித்தனியாக தொட்டுணர்ந்து அப்பாகமே யானை என்று வாதிட்ட கதை கூறப்பட்டு வருகின்றது. அதுபோல சமயங்களிடையிலான ஒற்றுமையினை வலியுறுத்தி பல்வேறு நதிகள் இறுதியில் சென்றடையும் இடம் கடலாக உள்ளதுபோல வெவ்வேறு சமய வழிமுறைகளை பின்பற்றுபவர்களும் இறுதியில் ஏகமான ஒரே இறைவனையே சென்றடைகின்றனர் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. ஆனால் யூதாயிசம், கிறிஸ்தவம், இஸ்லாம், இந்துசமயம், சமணம், பௌத்தம் என பல்வேறாக அமையும் சமயங்களும் அவற்றின் கடவுள் கொள்கைகளும், தனித்துவமான கலாசாரங்களும், ஒழுக்க போதனைகளும் வரலாற்று ரீதியாக பல்வேறு முரண்பாடுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன. உண்மையில் இம் முரண்பாடுகளுடனேயே மனித வரலாறும் வளர்ந்து வந்துள்ளது.

இத்தகைய முரண்பாடுகளுக்கு பல்இறைநம்பிக்கை (Polytheism) கொண்ட சமயங்களை விட ஓரிறைநம்பிக்கை (Monotheism) நம்பிக்கை கொண்ட

சமயங்கள் அதிகளவில் காரணமாக அமைந்துள்ளன. பல்இறைநம்பிக்கையானது பெரும்பாலும் விவசாயத்தினை வாழ்வாதாரமாக் கொண்ட சமூகங்களிலேயே தோற்றம் பெற்றுள்ளது. இம் மக்கள் தாம் வாழ்ந்து, விவசாயம் செய்துவந்த சிறிய நிலப்பகுதிகளில் இருந்த இயற்கை சக்திகள் தங்களது வாழ்க்கையினை கட்டுப்படுத்துகின்றன என்ற நம்பிக்கையினைக் கொண்டவர்களாக விளைச்சலின் சிறிய பகுதியினை அவற்றிற்கு அர்ப்பணித்து மகிழ்ச்சியூட்டுவதன் ஊடாக தங்களது வேண்டுகோள்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்யையில் செயற்பட்டனர். ஒவ்வொரு விவசாய பிரதேசங்களிலும் மாறுபட்ட கடவுள் நம்பிக்கைகள் காணப்பட்டன. ஒரு சமூகத்திற்கு மற்ற சமூகம் கொண்டிருந்த நம்பிக்கை, பின்பற்றிய சடங்குகள் பிரச்சினைக்குரியதாக இருக்கவில்லை. இது பன்மைத்துவத்தினை ஏற்றுக்கொண்டும் வன்முறைக்கு இடம் கொடுக்காமலும் வாழ்வதற்குரிய வாய்ப்பினை வழங்கியது. யாரையும் கட்டாயப்படுத்தி எந்தவொரு நம்பிக்கையினையும், சடங்குமுறையினையும் திணிப்பதற்கு அவசியம் இருக்கவில்லை. ஆனால் வர்த்தகத்தை மையமாகக் கொண்ட சமூகங்களில் பொருளாதார விருத்திக்காக பெரிய நிலப்பரப்புக்கள் தேவைப்பட்டது. இது அங்கு வாழ்ந்த அனைத்து மக்களிடையிலும் ஒருமித்த நம்பிக்கையினையும், ஒழுக்க முறைகளையும் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வேண்டியிருந்தது. இக் காரணத்தினால் பன்முக நம்பிக்கைகள் இல்லாது செய்யப்பட்டு ஓரிறைவாதத்தினை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகள் பலவந்தமாக மேற்கொள்ளப்பட்டன. வன்முறைகளும், பொருள்வளமும் இதற்காக கடவுளின் பெயரினால் பயன்படுத்தப்பட்டன.

இந்த வகையில், மனித இனத்தை ஒன்றிணைப்பதற்கான ஒரு சக்தியாக சமயம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மனிதர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற அனைத்து கட்டமைப்புக்களும் அழிவடையக்கூடியவை. சுயாதீன சித்தத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற மனிதர்கள் தங்களைப்போன்ற சாதாரண மனிதர்களினால் உருவாக்கப்படுகின்ற சட்டங்களினால் கட்டுப்படுத்த முடியாது என்பது உணரப்பட்ட நிலையில் கேள்விகளுக்கும் சந்தேகத்திற்கும் அப்பாற்பட்ட அதிகாரத்துவமுடைய இறைவன் என்பதன் பெயரில் அவை மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. இது சிதைவடையக்கூடிய மனித சமூகக் கட்டமைப்பினை தாங்கிப்பிடிக்கக்கூடிய சிறந்த மார்க்கமாக உள்ளது. ஆனால் இதன் ஊடான அமைதியான இனிய வாழ்க்கை குறித்த மதத்திற்குள் ஐக்கியமாகின்றவர்களுக்கே கிடைப்பதாக உள்ளது மாறாக புறச் சமயங்களில் உள்ளவர்கள் எப்போதும் ஆபத்தான அந்நியர்களாகவே நோக்கப்படுகின்றனர். மிக அதீதமான நிலையில் அவர்களது நம்பிக்கைகளும், கலாசாரங்களும் கீழ்நிலைக்குரியதாகவும் கருதப்பட்டு வந்துள்ளன.

சமயங்கள் போதிக்கின்ற ஒழுக்கக் கருத்துக்கள் தனி மனிதன் ஒருவன் தன்னளவிலும் சமூகத்திலும் இசைவான வகையில் நல்வாழ்க்கையினை

வாழ்வதற்கான வழிகாட்டல்களை வழங்குபவையாகவே அமைந்துள்ளன. அதாவது மக்களது நல்வாழ்க்கையே இங்கு இலக்காக உள்ளது. ஆனால் எந்த மக்களுடைய நல்வாழ்க்கையினை இலக்காகக் கொண்டவை என்ற கேள்வி எழுகின்றபோது அதற்கான பதில் குறித்த சமயத்தினை ஏற்று பின்பற்றுகின்ற மனிதர்களது நலன்களே என்றே பதில் அமைகின்றது. இவ்வாறு சமயங்கள் குறிப்பிடுகின்ற சர்வ வல்லமையும், மனிதத்துவமும் கொண்ட இறைவன் ஒரு சமூகத்தின் நன்மைக்காக மாத்திரமே செயற்படுபவர் எனில் அவர் எத்தகைய சுயநல மனப்பாங்கு கொண்டவராக இருக்க வேண்டும். அதாவது அவர் தன்னை நம்பி ஏற்றுக்கொள்பவர்களையும் விசுவாசிக்கின்றவர்களையும் மாத்திரமே ஆசிர்வதிக்கின்றார் எனில் சாதாரண மனித இயல்புக்கும், செயற்பாட்டுக்கும் கடவுளுக்கும் இடையில் என்ன வேறுபாடு இருக்கின்றது. இது கடவுள் தன்னுடைய சாயலில் மனிதர்களைப் படைத்தார் என்பதனை மாற்றி மனிதன் தன்னுடைய சாயலில் கடவுளைப் படைத்து தன்னுடைய நோக்கத்தினை அடைவதற்கு பயன்படுத்திக் கொள்கின்றான் என்ற புரிதலை ஏற்படுத்துவதாக உள்ளது.

இதனையே Xenophanes எனும் கிரேக்க தத்துவக் கவிஞனின் ''எதியோப்பியர்கள் தங்களுடைய கடவுள் தட்டையான மூக்கினைக் கொண்டவராக கருமை நிறத்தில் உள்ளார் என்றும், திரேசியன்கள் தங்களுடைய கடவுள் நீலக் கண்களையும் சிவப்பு தலைமுடியினையும் கொண்டவர் என்றும் கூறுகின்றனர். மாடுகளும், குதிரைகளும், சிங்கங்களும் மனிதர்களைப்போல வரையவும் சிலையமைக்கவும் இயலுமை கொண்டவையாக இருப்பின் குதிரைகள் அவை தங்களது வடிவத்திலேயே கடவுள் இருக்கின்றார் என்று உரிமை கொண்டாடும்'' என்ற கூற்று வெளிப்படுத்துகின்றது. இதனையொத்த கருத்தையே சமகாலத்தில் பிரபலமான வரலாற்றுத்துறைப் பேராசிரியரும் தத்துவவியலாளருமான யுவால் நோவா ஹராரி தன்னுடைய '*21ஆம் நூற்றாண்டுக்கான 21 பாடங்கள்*' எனும் நூலில் ''சமய புனித நூல்கள் அனைத்தும் கற்பனை வளம் கொண்ட ஹோமோ சேப்பியன்ஸ்களினால் உருவாக்கப்பட்டவையாகும். இவை அனைத்தும் தங்களுடைய சமூக வழக்கங்களையும் அரசியல் கட்டமைப்புக்களையும் சட்டபூர்வமாக்குவதற்காக நம்முடைய மூதாதையர்கள் புனைந்த கதைகளேயன்றி வேறொன்றுமில்லை'' என்று குறிப்பிடுகின்றார். இங்கு கற்பனைவளம் என்பதனுடன் புலமைத்துவம் கொண்டவர்கள் என்பதனையும் நாம் இணைத்துக்கொள்ள முடியும்.

உலகின் பல பாகங்களிலும் பல்வேறு காலப்பகுதிகளில் பல்வேறு சமயங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றின் மைய இலக்கு அந்த பிரதேசங்களில் இருந்த மக்களை ஒன்றிணைத்து தனித்துவமான அடையாளம் ஒன்றினை வழங்கி சமூகமாக செயற்படுவதற்கான ஏற்பாடுகளை செய்வதாக

இருந்துள்ளது. தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம் என்பவற்றிற்காக பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குமுறைகள் நியமங்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அச்சமூகங்களில் வாழ்ந்த செல்வாக்கு மிக்க, புலமைத்துவம் கொண்டவர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ இணைந்து இவற்றினை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட நியமங்களை சாதாரண மக்களுக்கு அறிவுபூர்வமான நியாயங்களைக் கூறி ஏற்றுக்கொள்ளச் செய்வதனைவிட கடவுள் என்ற கற்பிதத்தினை முன்வைத்து கட்டளை என்ற பெயரில் ஏற்றுக்கொள்ளச் செய்வது இலகுவான ஒன்றாக இருந்தது. நன்மை தீமை, தெய்வம் சாத்தான், ஒழுக்கம் ஒழுக்கமின்மை என்று இரண்டு துருவ நிலைகள் கற்பிக்கப்பட்டு அதில் கடவுள் விரும்புவது எதுவோ அதனை செய்பவனே இவ்வுலகத்திலும் இறப்பின் பின்னரும் நற்பேறு பெறுவான் என்றும் கற்பிதங்கள் முன்வைக்கப்பட்டன. இதன் பாகங்களே ஆன்மா, கர்மா, மறுபிறப்பு, சுவர்க்கம், நரகம் என்ற பௌதீக அதீத சிந்தனைகளாகும். சில சமயங்கள் பல கடவுள் நம்பிக்கையினையும், சில சமய நெறிகள் ஒரு தெய்வக் கோட்பாட்டையும், சில சமயங்கள் கடவுள் நம்பிக்கை அல்லாதனவாகவும் வெளிப்பட்டுள்ளன. இவை தோற்றம் பெற்ற சமூகங்களில் எத்தகைய கலாசாரங்கள் நடைமுறையில் இருந்தனவோ அவை ஒன்றில் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டன அல்லது சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட கலாசார அடையாளங்கள் ஊடாகவே அந்த சமயங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. இவற்றில் ஆடை அலங்காரங்கள், வழிபாட்டு முறைகள், வழிபாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்கள், கட்டட அமைப்புக்கள், உணவுப் பழக்கங்கள், விசேட தினங்கள் எனப் பல்வேறு விடயங்கள் உள்ளடங்குகின்றன. அதாவது பௌதீக அதீதமான கடவுளை முன்நிலைப்படுத்தி மக்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியமங்கள் கூறப்பட்டதுடன் அவற்றினை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான அறிவார்ந்தமான புனைவுகள் தர்க்க ரீதியாக கட்டமைக்கப்பட்டுள்ளன.

மக்களது ஒன்றிணைந்த வளர்ச்சிக்கும் நாகரீகங்களின் உருவாக்கத்திற்கும் சமயங்கள் காரணமாக அமைந்துள்ளமை ஒரு பக்கம் இருக்கின்ற அதேவேளையில் குறித்த ஒரு சமய நம்பிக்கையினை ஏற்றுக்கொள்ளாது வெளிச் சமயத்தில் இருப்பவர்களது நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் இழிவுசெய்வதும் கலாசாரங்களை கீழ்நிலையானவை என்று பழித்துரைப்பதும் அவற்றினை அழித்தொழிப்பதற்கான முயற்சிகளும் வரலாறு முழுவதும் விரவிக்கிடக்கின்றன. இந்த வகையில் சமயங்கள் மனித குலத்திற்கு நேர்நிலையாக ஆற்றியுள்ள பங்களிப்பினை விட எதிர்மறையாக ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் அதிகம் என்றே கூற வேண்டும். இதனாலேயே அன்பே வடிவான கடவுள் தன்னுடைய பெயரில் அழிவுகரமான செயற்பாடுகள் நடப்பதற்கு எவ்வாறு அனுமதிக்கின்றார் என்ற வினா எழுவதுடன் அவ்வாறு ஒரு கடவுள் இல்லை அனைத்துமே மனிதர்கள் ஏற்படுத்திக்கொண்ட

கற்பிதங்களும் அவற்றினை நிலைநிறுத்திக் கொள்வதற்குமான முயற்சிகளுமே என்ற புரிதலை ஏற்படுத்துகின்றது.
ஒவ்வொரு சமயங்களும் தங்களது கடவுள் முன்வைத்துள்ள கட்டளைகளை பின்பற்றுவதுதான் ஒழுக்கரீதியான வாழ்க்கைக்கும், மீட்சிக்குமான ஒரே வழியாகும் என்ற நிலைப்பாட்டில் அவற்றினை பின்பற்றாத மில்லியன் கணக்கான மக்களது ஒழுக்க வாழ்க்கை கீழ்நிலையானது, ஏற்றுக்கொள்ள முடியாதது என்று குறிப்பிடுகின்றன. இது குறிப்பாக உலகமயமாக்கம், தொழிநுட்ப வளர்ச்சி என்பவற்றினால் உலகின் ஒரு பகுதியில் உள்ள மக்களுடைய வாழ்க்கை இன்னுமொரு பகுதியில் உள்ள மக்களில் தங்கியுள்ள, பன்மைத்துவ பண்புகள் கொண்ட உலகில் அமைதியினை விட ஆபத்துக்களை ஏற்படுத்துகின்ற ஒன்றாகவே அமைகின்றது. பல்வேறு அக மற்றும் புறக் காரணிகளினால் சில மக்கள் தாங்கள் பாரம்பரியமாக பின்பற்றிய சமயங்களை துறந்து புதிய சமயநெறியினை பின்பற்றத் தொடங்குகின்றபோது, அதேவேளையில் தங்களது பாரம்பரியமான வாழிடங்களிலேயே வாழ்கின்றபோது அச்சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. ஒரு சமயம் தன்னுடைய நம்பிக்கைகளையும், கலாசாரங்களையும் ஏனையவற்றினைவிட உயர்வானது என்று தூக்கிப்பிடிக்கும்போது, நிலைநிறுத்த முயற்சிக்கும்போது ஏனையவர்களுக்கு எரிச்சலையும், அச்சவுணர்வினையும் ஏற்படுத்தி இறுதியில் அமைதியின்மைக்கும் முரண்பாடுகளுக்கும் காரணமாக அமைகின்றது.

அன்பே வடிவான கடவுள் எப்போதும் பெண்கள் விடயத்தில் பாரபட்சமான வழிகாட்டல்களையே வழங்கியுள்ளார் என்பதனை அனைத்து சமயங்களது போதனைகளும், செயற்பாடுகளும் வெளிப்படுத்துகின்றன. இவற்றில் பெண்கள் பூஜை செய்ய முடியாது, வழிபாட்டிடங்களுக்கு செல்ல முடியாது, முக்திப்பேறு பெற முடியாது, பார்வைக்கு உரியதான கண்களை மறைத்துக்கொள்ள வேண்டும், தாய்மையின் உடலியல் அடையாளத்தை எப்போதும் மறைத்தே வைத்திருக்க வேண்டும், தூய்மை, தீட்டு என்று பல்வேறு விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. ஆழமாக நோக்குகின்றபோது உண்மையில் இவை கடவுளின் விருப்பங்களா அல்லது ஆண் தலைமைத்துவ சமூகங்களில் பெண்களை கீழ்நிலைப்படுத்துவதற்காகவும், சுய கட்டுப்பாடு அற்ற ஆண்கள் அப்பாவியான பெண்களை கட்டுப்படுத்துவதன் ஊடாக தங்களையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்காக மேற்கொண்டுள்ள ஏமாற்றுத் திட்டங்களா என்ற வினாவை எழுப்புகின்றது. ஆனால் பெண்களும் அவற்றினை ஏற்றுக்கொண்டு செயற்படுவது தொடர்ச்சியாக நிலைபெற்றிருக்கும் அவர்களது இயலாமையின் வெளிப்பாடா அல்லது அதில் அவர்கள் பெற்றுக்கொண்ட சௌகர்ய உணர்வா அல்லது நூற்றாண்டுகளான தொடரும் பண்பாட்டினால் ஏற்பட்ட கூர்ப்பாக்கமா என்ற வினாக்களை எழுப்புகின்றது. பதில் எவ்வாறாக இருப்பினும் இங்கு புரிந்துகொள்ளப்பட வேண்டியது மனித வாழ்வியலை உய்விக்க தோற்றம் பெற்ற மதங்களின்

புனித நூல்கள் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்கான கருவிகளாக பயன்படுத்தப்படுகின்றமைக்கான மிகப்பெரிய உதாரணங்களில் இதுவும் ஒன்றாகும். ஏனெனில் பல்வேறாக அமையும் புனித நூல்களில் உள்ள சூத்திரங்களில் எவற்றினை தெரிவு செய்ய வேண்டும் எவற்றினை புறம் தள்ள வேண்டும், தெரிவு செய்கின்ற சூத்திரத்திற்கு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கு உகந்த வகையில் எவ்வாறு பொருள் விளக்கம் வழங்க வேண்டும் என்பது எல்லாம் மனித அறிவினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. இந்த அறிவு அதிகாரத்தினை தக்கவைத்துக்கொள்வதனையும், தனித்துவத்தினை பேணுவதனையும் இலக்காகக் கொண்டுள்ளது.

சமயங்களினால் பல்வேறு மனிதச் செயல்கள் ஒழுக்கமற்றவையாக புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை பின்பற்றப்படாமல் இல்லை. ஆகக் குறைந்தது இரகசியமாகவேனும் பின்பற்றப்படுகின்றன. பல்வேறு சந்தர்ப்பங்களில் சமயங்களினால் தடைசெய்யப்பட்ட விடயங்கள் இறைமை கொண்ட நாடுகளின் சட்டங்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் ஒரு விடயம் நல்லது என்பதனால் அது ஒழுக்கரீதியானது என்று கடவுளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா? அல்லது ஒழுக்கரீதியானது என்று கடவுளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையினால் ஒரு விடயம் நல்லதாகின்றதா? என்ற கிரேக்ககால விசாரணைக்கேள்வியினை முன்வைக்க வேண்டிய தேவை எழுகின்றது. நல்லது என்பதனால் கடவுளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் அங்கு கடவுளின் அதிகாரம் அவசியமற்றதாகின்றது. ஏனெனில் கடவுளினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னரே அவ்விடயம் நல்லதாகவே உள்ளது. கடவுளினால் ஏற்றுக்கொள்ளப்படுவதனால் ஒரு விடயம் நல்லதாகின்றது என்றால் புற மதங்களில் உள்ளவர்களை கொலை செய்யுங்கள் என்ற கட்டளையும் ஒழுக்க ரீதியான ஏற்புடைமை கொண்டதே. ஆனால் இக்கட்டளை இவ்வுலகத்தில் மனிதர்கள் எதிர்கொள்ளும் எத்தனை இன்னல்களுக்கு காரணமாக அமைகின்றது என்று நோக்குகின்றபோது அத்தகைய எதேச்சதிகாரமான கட்டளைகளை அன்புவடிவமானவர் என்று குறிப்பிடப்படுகின்ற கடவுள் மேற்கொள்வாரா என்ற அடுத்த வினா எழுகின்றது. சில சமயங்கள் உயிரினங்களை துன்பத்துக்கு உள்ளாக்காது தாவர உணவுகளை உண்பதற்கு வலியுறுத்துகின்ற அதேவேளையில் சில சமயங்கள் இவ்வுலகில் உள்ள விலங்குகளும் தாவரங்களும் மனிதர்களது நுகர்வுக்காகவே இறைவனால் படைக்கப்பட்டுள்ளன என்ற வழிகாட்டலை வழங்குகின்றன. இதுவே விலங்குவளர்ப்புப் பண்ணைகளில் எண்ணற்ற உயிரினங்கள் அளவற்ற துன்பங்களை எதிர்கொள்வதற்கும், பூகோள வெப்பமாதல் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைந்துள்ளது. இது உன்னைப்போலவே உன் அயலவனையும் நேசி என்று கூறப்படுவதானது சுய சமயத்தை பின்பற்றுகின்ற மனிதர்களை மாத்திரம்தான் அந்த அயலவன் என்பதற்குள் உள்ளடக்குகின்றதா என்ற வினாவினை எழுப்புகின்றது. இத்தகைய நிலைமைகளானவை அனைத்து சமயக் கற்பிதங்களையும்,

புனைவுகளையும் துறந்து விட்டு சமயச் சார்பற்ற வாழ்க்கை வாழ்வது உயர்வானது என்ற முடிவினை நோக்கி நகர்த்துகின்றது.
மதச்சார்பற்ற வாழ்க்கை என்பது கண்டங்களை கடந்த நட்புறவான வாழ்க்கைக்கு மிகச் சிறந்த வாய்ப்பாக தோன்றுகின்றது. ஆனால் இதற்கு அவசியமாக இருப்பது என்ன? நிச்சயமாக மதச்சார்பின்மை என்பது மத எதிர்ப்பு அல்ல என்பது அடிப்படையில் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. அடுத்ததாக நூற்றாண்டுகால புனைவுகள் பகுத்தறிவு பூர்வமான கேள்விகளுக்கு உள்ளாக்கப்படாது பின்பற்றப்படுவது தவிர்க்கப்பட வேண்டியதாக உள்ளது. அதேவேளையில் மனித வாழ்வியலை தடம் மாறாது முன்னெடுத்துச் செல்வதற்காக நியதிகள் பின்பற்றப்பட வேண்டியதாக உள்ளது. இது சாத்தியமானதா என்று வினவினால் நிச்சயமாக சாத்தியமானதே என்றே கூற வேண்டும். ஏனெனில் இன்று பின்பற்றப்படும் சமயங்களின் தோற்றத்திற்கு முன்னரே மக்கள் இவ்வுலகில் நல்வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். ஆனால் இச்சமயங்கள் குறிப்பிடுகின்ற இறைவன், சுவர்க்கம் என்ற விடயங்கள் அவர்களது இறப்பின் பின்னர் அடையப்பட்டனவா என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. உண்மையில் தற்போதைய சமயங்கள் கூட இதற்கான எந்த ஆதாரத்தையும் கொண்டவையாக இல்லை.

அனைத்து சமயங்களிலும், சமயம் சாராத தத்துவங்களிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 'பொன்னான விதி' (Golden Rule) "ஒருவர் தன்னை நேசிப்பதுபோல பிற அனைவரையும் நேசிக்க வேண்டும்" என்ற அறிவுறுத்தலை வழங்குவதாக உள்ளது. ஒருவர் பிறர் தொடர்பில் தான் செய்ய முனைகின்ற செயற்பாட்டின் விளைவின் ஏற்புடைமையினை பரிசீலிப்பதற்கு அந்த விளைவினை அனுபவிக்கின்ற இடத்தில் தன்னை வைத்து சிந்திப்பதன் ஊடாக புரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதாக உள்ள இந்த அற்புதமான வழிமுறையின் வரலாறு கடந்த, எல்லைகள் கடந்த வளர்ச்சியினை பின்வரும் வகைகளில் அடையாளப்படுத்தக்கூடியதாக உள்ளது.

இந்து சமயம் : "உனக்கு செய்யப்படும்போது துன்பத்தை உண்டாக்கக்கூடிய விடயங்களை நீ பிறருக்கு செய்யாதே - இதுவே கடமை என்பதன் சாராம்சமாகும்"

பௌத்தம் : "அனைத்து மனிதர்களும் தண்டனைக்கு அஞ்சுகின்றனர், மரணத்திற்கு அஞ்சுகின்றனர். ஒருவர் தன்னை பிறருடைய இடத்தில் வைத்து நோக்குவது கொலை செய்வதனையும், அதற்கு காரணமான செயல்களை செய்வதனையும் தடுக்கின்றது"

இஸ்லாம் : "நீங்கள் உங்களுக்கு விரும்புகின்றவற்றினை உங்களது உடன்பிறப்புக்களுக்காகவும் விரும்பாத வரையில் நீங்கள் இறை நம்பிக்கையுடையவர் அல்ல"

தாவோயிசம் : "எனக்கு நல்லவர்களாயிருப்பவர்களுக்கு நான் நல்லவனாயிருக்கின்றேன். எனக்கு நல்லவர்கள் அல்லாவதவர்களாக இருப்பவர்களுக்கும் நான் நல்லவனாயிருக்கின்றேன். இது அனைவரும் நல்லவர்களாயிருக்கின்றனர் என்ற முடிவை அடைகின்றது"

கன்பூசியனிசம் : "மற்றவர்கள் எனக்கு செய்ய விரும்பாத விடயத்தினை மற்றவர்களுக்கு செய்வதற்கு நான் விரும்ப மாட்டேன்"

பிளேட்டோ : "மற்றவர்கள் எனக்கு செய்ய வேண்டும் என்று நான் விரும்புகின்ற விடயங்களை அவர்களுக்கு நானும் செய்ய வேண்டும்"

யூதாயிசம் : "நீங்கள் பிறர் உங்களுக்கு செய்யக்கூடாது என்று விரும்பும் விடயங்கள் எதுவாயினும் அதனை நீங்களும் பிறருக்கு செய்யாதீர்கள்"

ஸ்டொயிக் தத்துவம் : "உங்களுக்கு மேல் இருப்பவர்கள் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அவ்வாறே உங்களுக்கு கீழ் இருப்பவர்களை நீங்கள் நடாத்துங்கள்"

தோமஸ் கொப்ஸ் : "உங்களுக்கு செய்யப்பட்டிருப்பதனை விரும்பாத ஒன்றினை நீங்கள் பிறருக்கும் செய்யாதீர்கள்"

இமாணுவெல் காண்ட் : "நீங்கள் செய்கின்ற செயற்பாட்டினையே அனைவரும் செய்தாலும் உலக ஒழுங்கு கெடமலிருக்கும் செயற்பாடுகளையே நீங்கள் செய்யுங்கள்"

இவ்வாறு தேசங்கள் கடந்து, சமயங்கள் கடந்து ஒரே சிந்தனை மாறுபட்ட மொழிநடையில் நூற்றாண்டுகளாக வெளிப்படுத்தப்பட்டு வருவதானது ஒழுக்கம் என்பது பகுத்தறிவுடைய மனிதர்களுக்கு இயல்பான வகையில் அமையப்பெற்ற ஒன்று மாறாக குறிப்பிட்ட ஒரு காலத்தில் குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒருவருக்கு சுவர்க்கத்தில் இருந்து வெளிப்படுத்தப்பட்டது அல்ல என்ற உண்மையினை ஏற்றுக்கொள்ள வேண்டியதாக உள்ளது. இது மனிதர்கள் பொதுவாக பின்பற்ற வேண்டிய ஒழுக்க விழுமியங்கள் உலகம் எங்கும் பரவி வாழ்கின்ற மக்களுக்கு இயல்பாகவே அமையப்பெற்ற ஒன்று என்பதனையும் இவை யூதர்கள்,

கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், இந்துக்கள், பௌத்தர்கள் என அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும் என்பதும் இவை இச் சமயங்கள் நம்புகின்ற கடவுள்களது தனிப்பட்ட படைப்புக்களோ, அம்மக்களுக்கென்று தனித்துவமாக தயாரிக்கப்பட்ட விழுமியங்கள் என்றோ யாரும் உரிமை கோருவது உண்மைக்கு எதிரானதாகும்.

எந்தவொரு மதச்சார்பற்ற செயற்பாடும் கடவுளின் கட்டளை என்ற ஒரே காரணத்தினால் மேற்கொள்ளப்படுவது அல்ல மாறாக கடவுளின் கட்டளை என்று சமயநம்பிக்கையாளர்கள் கூறினாலும் அவற்றை அறிவுபூர்வமான விசாரணைக்கு உள்ளாக்கி பிற எந்தவொரு சமூகத்தினது நலனையும் பாதிக்காது என்று உறுதி செய்த பின்னர் பின்பற்றப்படுவதாகும். உதாரணமாக மதச்சார்பற்றவர்கள் ‘கொலை செய்தலாகாது’ என்பதனை பின்பற்றுவது அது இறைவனது கட்டளை என்பதற்காக அல்ல மாறாக அது இவ்வுலகில் அளவற்ற துன்பத்தை ஏற்படுத்துகின்றது என்பதனாலேயேயாகும். இதுவே உண்மையான மனித நேயத்தின் அடிப்படையிலான செயற்பாடு ஆனால் கடவுளது கட்டளை என்பதற்காக அதனை பின்பற்றுபவர்கள் செயற்கை நுண்ணறிவினால் முன்கூட்டியே நிகழ்ச்சிநிரலாக்கம் செய்யப்பட்ட இயந்திர மனிதர்களைப் போன்றவர்கள். இவர்களுக்கு புனித நூல்களில் உள்ள வாக்கியங்களை தேவைக்கேற்ப வியாக்கியானம் செய்து பரப்புரை செய்வதன் ஊடாக அதுவே இறைவனது கட்டளை என்று நம்பச்செய்து அதாவது நிரலாக்கத்தை மாற்றியமைத்து மிகக்கொடூரமான காரியங்களுக்காக பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு உள்ளது. இது மிகவும் ஆபத்தானதாகும்.

அடுத்த முக்கியமான விடயம் மதச்சார்பின்மை என்பது உலகின் பன்மைத்துவ கலாசாரத்தை, ஒழுக்க செயற்பாடுகளை புரிந்துகொண்ட, ஏற்றுக்கொண்ட வகையில் செயற்படுவதாகும். இது அனைவருக்கும் பாதுகாப்பானதாகும். ஆனால் தாங்கள் உண்மை என்று பின்பற்றுகின்ற நம்பிக்கைகள் புறத்தேயிருந்து வருகின்ற ஒரு சில தாக்கங்களினால் பொலிவிழந்து இறுதியில் பின்பற்றுவதற்கு இலாயக்கற்றதாகிவிடும் என்ற பயத்தின் காரணத்தினால் இறுக்கமான நெறிமுறைகளை பின்பற்றுகின்றவர்கள் அனைவருக்கும் ஆபத்தானவர்களாவார்கள். இது பிளேட்டோவின் ‘குகை உருவகக் கதை’ (Allegory of the Cave and Metaphor of the Sun) யின் ஊடாக புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகும். இதன்படி பிறந்தது முதற்கொண்டு வெளியுலகத்துடன் எந்தவொரு தொடர்பும் இல்லாது ஒரு குகையின் உள்ளே சுவர் ஒன்றினை நோக்கி முகத்தை வைத்து விலங்கிடப்பட்டிருக்கும் மக்களுக்கு உள்ளே இருக்கும் ஒரு நெருப்பின் துணைகொண்டு உருவாக்கப்படும் நிழல்கள் அந்த சுவரில் காட்டப்பட்டு அதுவே உண்மையானவை என்ற கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோது அந்த நிகழ்வுகளை விபரிப்பதற்கு பெற்றுக்கொள்கின்ற இயலுமையினை தங்களது சிறந்த அறிவாற்றலாக மெச்சிக்கொண்டு வாழ்வார்கள். ஆனால்

அதிர்ஸ்டவசமாக அக்குகையில் இருந்து ஒருவர் வெளியே வந்து சூரிய வெளிச்சத்தில் புறவுலகை காண்கின்றபோது அது உடனடியாக கண்களை கூசச் செய்வதாக இருக்கும் எனினும் தொடர்ச்சியான முயற்சியால் அவர் உண்மையினை அறிவதில் வெற்றி பெறுவார். ஆனால் அவர் தான் வாழ்ந்த குகைக்கு திரும்பிச் சென்று தான் அறிந்த உண்மையினை அங்குள்ளவர்களுக்கு வெளிப்படுத்த முயன்றால் முதலில் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதுடன் தங்களது நம்பிக்கைக்கு முரணான ஒன்று புதிதாக முன்வைக்கப்படுகின்ற காரணத்தினால் அதற்கு காரணமானவரை தாக்குவதற்கும், கொலை செய்வதற்கும் முயற்சிப்பார்கள். இது இயல்பான ஒன்று. ஏனெனில் பெரும் குற்றங்கள் பகைமையின் காரணமாகவோ அல்லது பேராசை காரணமாகவோ நிகழ்த்தப்பட்டமையினை விட அறியாமை காரணமாக இடம்பெற்றதே அதிகமாகும். இங்கு அறியாமை தனிநபர்களை விட குழுவிற்கு உரியதாக இருக்கும்போது ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மிக அதிகமாகும். இதுவே மனித அறியாமைத்தனத்தை குறைத்து எடைபோடக்கூடாது என்று கூறப்படுவதற்கு காரணமாகின்றது. இங்கு குகை என்பது சமயங்களையும், தீ என்பது சமயங்களின் புனித நூல்களையும், சூரிய வெளிச்சம் என்பது பகுத்தறிவுச் சிந்தனையினையும் குறிப்பதாக அமைகின்றன.

இந்த வகையில் சமயங்கள் கற்பிதங்களே என்பதும் அவை கடவுள் என்ற மாயையின் துணைகொண்டு கட்டமைக்கப்பட்டுள்ள கோட்டைகள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. அதாவது மனிதர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிமுறைகளை இயற்கையினை கடந்த சக்திக்கு கடவுள் என்ற பெயரினை வழங்கி அதனுடன் இணைத்து முன்வைக்கப்பட்டவையே சமயங்கள். அதேவேளையில் ஒழுக்க நெறிமுறைகைளும், பின்பற்ற வேண்டிய விழுமியங்களையும் தனியே முன்வைக்கின்ற சிந்தனைகள் ஒழுக்கக்கொள்கைகளாகவும், கருத்தியல்களாகவும் அறியப்படுகின்றன. மறுநிலையில் மனிதர்களை கடந்த இயற்கை ஆற்றல் (Cosmic Force) ஒன்று உள்ளது ஆனால் அது இறைவன் அல்ல என்ற நிலைப்பாட்டினைக் கொண்டதாக விஞ்ஞானம் செயற்படுகின்றது. இந்த உண்மைகளுக்கு மத்தியிலேயே சமயம் என்ற புனைவுக் கோட்டைகளை எவ்வளவு ஸ்திரமாக பேணிக்கொள்ள முடியும் என்பதற்கான போட்டி அரசியலாக வெளிப்படுகின்றது. இதில் பாதிப்பிற்கு உள்ளாகுவது அதிகாரத்தில் இருப்பவர்கள் அல்ல மாறாக விளிம்பு நிலையில் உள்ள சாதாரண பொது மக்களே. இக்கோட்டைகளில் இருப்பவர்கள் தாங்கள் சார்ந்த குழுக்களது நலன்களை பேணிக்கொள்வதற்கு முயற்சி செய்கின்கின்றார்களே தவிர புறவயமான உலகளாவிய உண்மைகளை அறிந்துகொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் முயற்சி செய்வது இல்லை. பிற சமூகங்களில் உள்ளவர்களுக்கு அரிதாக வழங்கப்படுகின்ற உதவிகளும் தங்களது பெருமையினை நிலைநிறுத்திக்கொள்வதற்கான முயற்சிகளாக

வெளிப்படுகின்றனவே தவிர உண்மையான மனிதாபிமானத்தின் அடிப்படையில் அமைந்தவை அல்ல. அவ்வாறு அமையுமாயின் அதுவே உண்மையில் மதச்சார்பற்ற செயற்பாடு, மனிதாபிமானத்தை முன்நிலைப்படுத்திய செயற்பாடு. அதுவே சமகாலத்திற்கு அவசியமான ஒன்று. அதனையே அனைவரும் மேற்கொள்வதற்கு முயற்சிப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

**உசாத்துணை நூல்கள்:**


Adamson, P. (2014). *Classical Philosophy – A history of Philosophy Without Any Gap Volume I.* USA: Oxford University Press

Gill, A. L., & Pellegrin, P. (2006). *Blackwell Companions to Ancient Philosophy*. USA: Blackwell Publishing

Harari, Y.N. (2014). *Sapiens - A Brief History of Humankind.* USA: Harvill Secker

Harari, Y.N. (2018). *21 Lessons for the 21st Century.* England: Jonathan Cape

Huntington, S.P. (2011). *The Clash of Civilization and the Remaking of World Order.* USA: Simon & Schuster

Pojman, L. P. (2005). *How Should We Live - An Introduction to Ethics*. USA: Wadsworth Cengage Learning


*****